# வேலணை மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா 22வது ஆண்டுப் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 2017ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3600 Kingston Rd- Scarborough இல் அமைந்துள்ள Scarborough Village Recreation Centre மண்டபத்தில் திரு. சி. இளஞ்செழியன் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வழமையிலும் பார்க்க அதிக எண்ணிக்கையான அங்கத்தவர்கள் மற்றும் முன்னாள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முதலில் திரு ஆறுமுகம் துரைராஜா அவர்களது இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் கடந்த 21 ஆண்டுகளாகச் சங்கம் கடந்து வந்த பாதை பற்றியும் தற்போது சங்கத்தினால் செயற்படுத்தப்படும் அர்த்தமுள்ள நீண்ட காலச் செயற்திட்டங்கள் பற்றியும் இதனால் தற்போது கல்லூரியும் மாணவர்களும் அடைந்து வரும் நன்மைகள் பற்றியும் விபரமாக எடுத்துரைத்தார்.

பின்னர் பழைய மாணவரும் புங்குடுதீவுப் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான திரு சிவசாமி திருச்செல்வம் அவர்கள் சங்கத்தின் சிறந்த செயற்பாடுகளையும் நிதி சம்பந்தமான பொறுப்புக் கூறலையும் அங்கத்தவர்களுக்கான தகவல் பரிமாற்றங்களையும் பாராட்டியதுடன் சங்கம் கனடாவில் ஓர் முன்னுதாரணமான அமைப்பாகச் செயற்படுவதையும் சுட்டிக்காட்டினார்.

அடுத்து உரையாற்றிய முன்னாள் பிரதி அதிபர் திரு பொன் ஈசன் அவர்கள் தான் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் சங்கம் நிறைவேற்றிய அரிய செயற்பாடுகளையும் தற்போதய செயற்திட்டங்களையும் பாராட்டியதுடன் சங்கத்தால் கல்லூரி அடைந்து வரும் நன்மைகள் பற்றியும் சுருக்கமாகக் கூறினார். அடுத்து நடைபெற்ற எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலின் போது பழைய மாணவர்கள் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் குறிப்பாகக் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சங்கம் ஆற்றி வரும் அளப்பரிய சீரிய பணிகள் பற்றியும் தங்கள் எண்ணக்கருத்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு தொடர்ந்தும் ,ப்பணிகள் வழமை போல் தொடருவதற்கு செயற்திறன் மிக்க தற்போதய நிர்வாகம் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று ஒருமனதாக வலியுறுத்தியமையால் அதே நிர்வாகம் ஒரு சில மாற்றங்களுடன் மீணடும் தெரிவு செய்யப்பட்டது. நிறைவாகப் பழைய மாணவர்களின் நிர்வாகத்திலுள்ள சுவையகம் நிறுவனத்தினரின் அறுசுவை உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

2017-2018 ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம்: பதவிசார் உறுப்பினர்கள்: சி. இளஞ்செழியன் (தலைவர்) பொன் பஞ்சலிங்கம் (உபதலைவர்) கு. கலயாணசுந்தரன் (உபதலைவர்) சு.சிவகுமார் (செயலாளர்) ச.மேகவர்ணன் (உப செயலாளர்) ச. சிறீதரன் (பொருளாளர்) பதவிசாரா உறுப்பினர்கள்: பொ. பாலசுந்தரம் வை. செல்வம், லோகன் சுந்தரம், இ.உருத்திர காந்தன், சி. மகாபூரணன், க. பாஸ்கரன் பிரபு பொன்னம்பலம், தி. இளமுருகன் K. S. கதிர்காமநாதன் இ.திருவாரூரன் இ பாலச்சந்திரன் (கணக்குப் பரிசோதகர்)

பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் ஆவணி மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.







